# "அம்மா, வைத்தியசாலை என்றால் என்ன?"

**உங்கள் பிள்ளையை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு, இவ்வாறு தயார்படுத்தலாம்.**

நோய், விபத்து, வைத்தியசாலை பற்றிய விடயங்களை, உடனடியாக வைத்தியசாலைக்குப் போக வேண்டிய சூழ்நிலை இல்லாவிட்டாலும் கூட, உங்கள் பிள்ளைகளுடன் பேசுங்கள்.

வைத்தியசாலையில் தங்கியிருக்கும் சூழ்நிலை வரும்போது, வைத்தியசாலையில் அவரது எதிர்பார்ப்பு என்ன, அங்கு அவருக்கு என்ன நடைபெறும் என்பதை உங்கள் பிள்ளை அறிந்திருக்க வேண்டும். உங்கள் பிள்ளையின் வயதுக்கும் அவரது நிலைமைக்கும் ஏற்ற தகவல், அவரது அச்சத்தைப் போக்கி, நம்பிக்கையையும் பாதுகாப்பையும் வளர்க்க உதவும். சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிப்பது எப்போதும் இலகுவானதல்ல. உதவக் கூடிய ஆலோசனையாவது எல்லாமே நல்லதுதான் என்றும் கூறாமல், அதேநேரம் பயப்படக் கூடியமாதிரியும் இல்லாமல், அமைதியாகவும் நம்பகமாகவும் எடுத்துரைக்க வேண்டும்.

உங்கள் பிள்ளை ஓரளவு வளர்ந்தவராக இருந்து, அவர் குறுகியகாலம் அல்லது நீண்ட காலம் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டியிருந்தால், அவரை ஆயத்தப்படுத்த உங்களுக்குப் பல வழிகள் இருக்கின்றன. அநேகமான சிறுவர்வைத்தியசாலைகள் அல்லது சிறுவர்பிரிவுகள் உங்களையும் உங்கள் பிள்ளையையும் வைத்தியசாலையைச் சுற்றிக் காட்டுதல் அல்லது எல்லோரும் இணைந்திருந்து ஒரு பிற்பகல் வேளையில் விளையாட்டு மூலம் பழகுதல் போன்ற வாய்ப்பை வழங்குகின்றன. அதன்பின்பு உங்கள் பிள்ளையுடன் அது பற்றிய அவரது கருத்து, பயம், எதிர்பார்ப்பு என்ன என்பது பற்றிக் கதையுங்கள். இயலுமானளவு அநேக வினாக்களுக்கு விடையளிக்க முயலுங்கள்.

# "எனது பொம்மை இல்லாமல் வரமாட்டேன்"

**வைத்தியசாலைப் பிரவேசத்தை, இவ்வாறு இலகுவாக்குங்கள்.**



எந்த வயதான பிள்ளைக்கும் வைத்தியசாலையில் தங்கியிருப்பதென்பது ஒரு மாறுபட்ட அனுபவமாகும். அநேகமாக, வீட்டிலுள்ள அன்றாட வாழ்க்கைப் பழக்கவழக்கங்களிலிருந்து அவர்கள் விலகி, வேறுபாடாக நடந்து கொள்வர். பழக்கப்படாத சுற்றாடல், பரீட்சயமில்லாத முகங்கள் அவர்களைக் கூச்சப்படச் செய்யும். அநேகமான பிள்ளைகளுக்கு வலிக்கும் என்கின்ற அல்லது பெற்றோரை விட்டுப் பிரிந்திருக்கும் பயம், சிகிச்சையையிட்டு அல்லது அவசியம் நடைபெற வேண்டிய சத்திரசிகிச்சையையிட்டு அச்சம் ஏற்படும்.

அதனால், நீங்கள் அல்லது பிள்ளைக்கு மிக நெருங்கிய ஒருவர் பிள்ளையுடன் இருப்பது நல்லது. பிள்ளை விரும்பி விளையாடும் கரடிப்பொம்மை, பொம்மை அல்லது விரும்பிப் போர்த்தும் கம்பளம் போன்ற விருப்பமான விளையாட்டுப்பொருட்களைக் கொண்டு வாருங்கள். அது பழையதாக அல்லது பழுதடைந்ததாக இருந்தாலும் பரவாயில்லை அதனைக் கொடுப்பதன் மூலம், நீங்கள் உங்கள் பிள்ளைக்குப் பாதுகாப்புணர்வை வழங்குகின்றீர்கள்.

# "என்னைத் தனியாக விட்டுவிடாதீர்கள்"

**உங்கள் பிள்ளையை, இவ்வாறு நீங்கள் வழிநடாத்தி ஆதரவு வழங்கலாம்.**



பெற்றோர் அல்லது மிக நெருங்கிய ஒருவர் முன்னிலையில் மிக நன்றாக ஆயத்தப்படுத்தலாம் என்பது மிகைப்படுத்தப்பட்ட கருத்தல்ல; அதன் மூலம் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலத்தில் பங்குகொள்ளும் அனைவருக்கும் இது இலகுவான சூழலை உருவாக்கும். அதிலும் ஓர் அவசர சூழ்நிலையில், நீங்களும் உங்கள் பிள்ளையும் முன் ஆயத்தம் இல்லாமலிருக்கும்போது, இது மிக முக்கியம்.

தனது பெற்றோர் அல்லது தனக்கு மிக நெருங்கிய ஒருவர் தன்னுடனிருப்பார் என்பது பிள்ளைக்குத் தெரிந்திருப்பது நல்லது.

குழந்தைகளுக்கும் சிறிய பிள்ளைகளுக்கும் ஏன் வைத்தியசாலைக்குப் போக வேண்டும் என்பதும் அங்கு ஏன் தங்கியிருக்க வேண்டும் என்பதும் விளங்காது என்பதனால், நீங்கள் அவர்களுடனிருப்பது இன்னும் முக்கியமாகின்றது.

ஒரு வேளை, பெரிய பிள்ளைகளும் வாலிபப்பருவத்தினரும் தமக்கு நெருங்கிய ஒருவர் தம்முடன் இரவில் நிற்க வேண்டும் என்கின்ற தேவை இல்லாதவர்களாக இருக்கலாம். அப்படியிருந்த போதிலும், நோயின் தன்மையைப் பொறுத்து, சிலவேளைகளில் பெற்றோரில் ஒருவர் பிள்ளையுடனிருப்பது, வரவேற்கத் தக்கது. இப்படியான சந்தர்ப்பங்களில் பிள்ளையின் கருத்தை மதித்துக் கவனத்திலெடுக்க வேண்டும்.

# "என்னுடன் இருங்கள்!"

**நீங்கள் உங்கள் பிள்ளையுடன் இரவில் இவ்வாறு தங்கியிருக்கலாம்.**

ஏறக்குறைய அனைத்து வைத்தியசாலைகளிலும் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் இரவில் தங்கியிருக்கலாம் *(Rooming-in)*. அநேகமாகப் பிள்ளையின் கட்டிலருகே ஒரு சாய்விருக்கை *(Liegebett)* போடப்பட்டிருக்கும். உங்கள் அருகாமையைப் பிள்ளை உணர்வதனால், தான் வேறோரிடத்தில் இருக்கின்ற உணர்வு குறைவாக இருப்பதுடன், இரவில் விழிக்கின்றபோது பிள்ளைக்குத் தனிமையாகவும் இருக்காது. ஒரு ஹோட்டலில் இருக்கின்ற வசதிகளை நீங்கள் நிச்சயமாக எதிர்பார்க்க முடியாதிருக்கின்ற போதிலும், உங்கள் பிள்ளை சுகயீனமுற்ற இந்நிலையில், அதனது சிரமமான இந்த வாழ்க்கையனுபவத்தின்போது, அதற்கு உறுதுணையாக நீங்கள் இருப்பது இங்கு முக்கியமான விடயம்.

எப்போதும் பெற்றோர் வைத்தியசாலையில் தங்கியிருப்பதும் முடியாத காரியம். அப்போது இந்த நிலையைப் பிள்ளைக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் தெரிவிக்க வேண்டும். குடும்பச்சூழ்நிலை அல்லது வேறு காரணங்களுக்காகப் பிள்ளையுடன் நீங்கள் தங்கியிருக்க முடியாதிருக்கும் பட்சத்தில், அதுவும் புரிந்துணர்வுடன் மதிப்பளித்து ஏற்றுக்கொள்ளப்படும்.



இரவில் நீங்கள் தங்கியிருப்பதற்கான செலவும் உங்கள் சாப்பாடு-குடிபானச் செலவும் வெவ்வேறான முறையில் கணக்கிடப்படுகின்றது; இதற்கான செலவு ஒருசில சந்தர்ப்பங்களில் முற்றாகவும், சில வேளைகளில் பகுதிவாரியாகவும் வைத்தியக்காப்புறுதியினால் செலுத்தப்படுகின்றது. இது பற்றிய தகவல்களை வைத்தியசாலை அனுமதியின் முன்பே விசாரித்தறியுங்கள்.

# "மீண்டும் எப்போது வருவீர்கள்?"

**பார்வையாளர் வருகை, வைத்தியசாலையின் நாளாந்த முக்கிய விடயம்.**

ஒவ்வொரு நாளும் குடும்பத்தினரும், நண்பர்களும் அல்லது வகுப்புத் தோழர்களும் பிள்ளைகளை ஒழுங்கு தவறாது வந்து பார்ப்பது, அனைத்து வயதுப் பிள்ளைகளுக்கும் தம்மீது மற்றவர்கள் அன்பாக இருக்கும் விடயத்தை உணர்வதற்கு அவசியமானது.

நெருங்கிய குடும்ப அங்கத்தவரல்லாதவர்கள், சாதாரண பார்வையாளர் நேரத்தைக் கடைப்பிடிப்பதுடன், அனைவரும் ஒரே நேரத்தில் ஒன்றாக வருகை தராதிருப்பதும் விரும்பத் தக்கது. இத் தொடர்புகள் அவசியமானதால், ஒரு நாளைக்கு ஒரு பார்வையாளரையிட்டு உங்கள் பிள்ளை மகிழ்ச்சியடையும் பொருட்டு, எப்போது யார் வருவது என்பதை ஒருவரோடு ஒருவர் பேசித் தீர்மானிக்க முயற்சியுங்கள்.

பார்வையாளர்களின் இவ்வாறான வருகையானது, உங்களுக்கும் அல்லது பாதுகாவலருக்கும் உங்களுக்காக நேரத்தை ஒதுக்கி, நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பத்தைத் தரும்.



நீண்டகாலம் வைத்தியசாலையில் தங்கியிருக்கும்போது, நீங்கள் மாத்திரம் உங்கள் பிள்ளையைப் பராமரிப்பது என்பது உங்களால் முடியாத காரியமாக இருக்கலாம். பாட்டன்-பாட்டி, வயதுக்கு மூத்த சகோதரங்கள், பாதுகாவலர் அல்லது நம்பிக்கையான ஒருவரை உதவிக்கு அழைக்கத் தயங்காதீர்கள்; இதன் மூலம் நீங்கள் ஓரளவு ஓய்வெடுக்கக் கூடியதாக இருக்கும்.

# "அப்பா, எனக்குப் பயமாக இருக்கின்றது!"

**பரிசோதனைகளின்போது அல்லது மயக்கமருந்து கொடுப்பதற்கு ஆயத்தப்படுத்தும்போது, இவ்வாறு உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஆதரவளித்து ஆசுவாசப்படுத்தலாம்.**

முடியுமானால் எப்போதும் உங்கள் பிள்ளையின் பரிசோதனைகளின்போது, பிள்ளையுடன் நீங்களும் இருங்கள்; பிள்ளையினுடைய சௌகரியமாக அணைத்துக்கொள்ளும் மிருகப்பொம்மையை *(Kuscheltier)* அல்லது விருப்பமான பொம்மை ஒன்றையும் அத்துடன் உங்கள் பிள்ளைக்கு நீங்கள் வாசித்துக் காட்டக் கூடிய புத்தகம் ஒன்றையும் உடனெடுத்து வாருங்கள். உங்கள் பிள்ளைக்குச் சத்திரசிகிச்சை பற்றிய பயமிருந்து அதற்கெதிராக மறுப்புக் கூறுமாக இருந்தால், அதனது பயத்தைத் தெளிய வைக்கக் கூடியவாறு பொறுமையுடனும் அமைதியாகவும் எடுத்துக் கூறுங்கள். பிள்ளையினுடைய நம்பிக்கைக்குரியவராக நீங்கள் இருப்பதனால், பிள்ளையினுடைய இந்தச் சிரமமான சூழ்நிலையில் அதனுடனிருந்து ஆறுதலளிக்க வேண்டியவராதலால், "வேற்றுமனிதன்" போன்ற நிலையிலிருந்து பேசாதீர்கள்.

இறுக்கமாகப் பிடித்திருத்தல், கட்டி வைத்திருத்தல் போன்ற நிர்ப்பந்த நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும். நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பிள்ளையின் பயத்தைப் போக்கப் பிள்ளைக்கு உதவக் கூடிய, ஏற்கனவே செய்து பழக்கப்பட்ட தந்திரோபாயங்களை அனுபவம் மிக்க வைத்தியர்களும் தாதியர்களும் பிரயோகிப்பார்கள். நீங்கள் உங்கள் பிள்ளையுடன் உலாத்திக் கொண்டு, மீண்டுமொருமுறை அது பற்றி அமைதியாகக் கதைக்கக் கூடியதாகப் பரிசோதனையைச் சிறிது நேரம் ஒத்திப் போடவும் முடியும்; அல்லது வைத்தியர் அங்கிருக்கும் விளையாட்டுப்பொம்மையை முதலில் பரிசோதிப்பார். அநேகமான சந்தர்ப்பங்களில் தற்போது ஊசி பாவித்தல் கைவிடப்பட்டுள்ளது அல்லது அவ்விடத்தில் வலியை உணரமுடியாமல் விறைப்பை ஏற்படுத்தும் ஒரு பிளாஸ்ரர் ஒட்டப்படும்; அதன்மூலம் அவ்விடத்தில் ஊசி ஏற்றும்போது வலியே தெரியாதிருக்கும்.

மயக்கமருந்து கொடுப்பதற்கு ஆயத்தப்படுத்தும்போதும் பிள்ளை மயக்கத்திலிருந்து மீண்டும் விழித்தெழும்போதும் உங்களது அருகாமை பிள்ளையின் பயத்தைப் போக்க உதவும். மயக்கமருந்து கொடுக்க ஆயத்தப்படுத்தும்போதும் அல்லது மயக்கம் தெளிந்து எழுகின்ற அறையிலும் உங்கள் பிள்ளையின் அருகில் நீங்கள் இருக்கலாம் என்பது அனைத்து வைத்தியசாலைகளிலும் நடைமுறையிலில்லை. வைத்தியசாலை அனுமதியின் முன்பே அதுபற்றிய தகவல்களைக் கேட்டறியுங்கள்; முடியுமானால் பெற்றோர் அருகாமையில் இருக்க அனுமதிக்கும் வைத்தியசாலை ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்.



குடும்பச்சூழ்நிலை அல்லது வேறு காரணங்களுக்காகப் பெற்றோருக்கு எப்போதும் பிள்ளையுடன் நிற்பது முடியாத காரியமாகவும் இருக்கும். இதுவும் நிச்சயமாகப் புரிந்துணர்வுடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

→

## "நான் என்ன செய்யலாம்?"

**அதிக பட்ச பராமரிப்பை, பெற்றோரும் பாதுகாவலரும் வழங்கலாம்.**

யார் பிள்ளையுடன் தங்கியிருக்கின்றாரோ, அவர், தாதியரிடம் அன்றாட வழமையான வேலைகளைக் கேட்டறிந்து, எங்கே பராமரிப்பு பிரயோசனமானது என்பதற்கமைய அங்கே அதனைப் பிரயோகிக்க வேண்டும். உங்களிடமிருந்து அவர்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதையும், உங்களது விருப்புகள், எதிர்பார்ப்புகள் என்ன என்பதையும் ஒரு கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்பு வீட்டிலும் குறிக்கப்பட்ட பராமரிப்புத் தேவையாக இருந்தால், அனுபவமிக்க வைத்தியதாதியர்களின் மேற்பார்வையின் கீழ், இதனைப் பயில்வதற்கு வைத்தியசாலையில் வாய்ப்புள்ளது.

நீங்கள்தான் உங்கள் பிள்ளையைப் பற்றி நன்றாக அறிந்தவர் என்பதுடன் ஏதாவது சரியாக இல்லை என்றால் அநேகமாக நீங்களே முதன்முதலாகத் தெரிந்தும் கொள்வீர்கள். அதனால் உங்கள் பிள்ளைக்கு வலி இருப்பதாக நீங்கள் உணர்ந்தால் அல்லது வழமைபோல் இல்லாமல் வேறுவிதமான எதிர்விளைவைப் பிள்ளையிடம் நீங்கள் அவதானித்தால், காலம் தாமதிக்காதீர்கள்; உடனடியாக மருத்துவத்தாதியரிடம் கூறுங்கள்.

ஏதாவது சரியாக நடைபெறவில்லை என்று நீங்கள் கருதினால், அது சம்பந்தப்பட்டவருடன் நேரடியாகப் பேசுவது, குறிக்கப்பட்ட பிரச்சினையைத் தீரப்பதற்கான சிறந்த வழியாகும்.

சில வைத்தியசாலைகளில் அவசர வேளைகளின்போது ஆலோசனை பெறுவதற்கு, ஒரு தொடர்பாளர் நிலையமும் உள்ளது.

நீங்கள் நினைத்தபடி அனைத்தும் திருப்தியாக நடைபெற்றிருக்கும் பட்சத்தில், அதனையிட்டுப் புகழ்ந்துரைக்க மறந்து விடாதீர்கள்!



## "டொக்ரர், தயவுசெய்து எனக்கு அதனை விளக்கமாகக் கூறுங்கள்..."

**விபரங்களை முற்றாக அறிந்துகொள்வது, உங்கள் உரிமை.**

உங்கள் பிள்ளைக்கு அவரது வயதுக்கும் வளர்ச்சிக்குமேற்ப விளங்கக்கூடிய வகையில், அத்தியாவசியப் பரிசோதனைகள், சத்திரசிகிச்சைகள் பற்றி வைத்தியருக்கூடாக விபரம் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவரது கருத்தை அறிந்திருப்பதுடன் அதனைக் கவனத்தில் கொள்வதும் அவரது உரிமையாகும்.

ஒவ்வொரு சிகிச்சைக்கும் பரிசோதனைக்கும் பெற்றோரது சம்மதம் அவசியம். நீங்கள் ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு, அது சம்பந்தமான முற்றான விபரங்களையும் விளக்கங்களையும் அறிந்து கொள்வது உங்கள் உரிமை. ஒரு பிள்ளை பெரியவராக, ஏறக்குறைய 12 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் அல்லது ஏற்கனவே பலமுறை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருக்கும் பட்சத்தில், பிள்ளையினது சம்மதமும் அவசியமாகும.



## வைத்தியசாலையில் பிள்ளைகளின் அறைக்குள் "நெருக்கடியான சூழ்நிலை"

**நோய்வாய்ப்பட்டிருக்கும் போதும், வைத்தியசாலையிலும் சிலவேளைகளில் பிள்ளைகள் வழக்கத்திற்கு மாறாக நடந்துகொள்வார்கள்.**

சில பிள்ளைகள் வைத்தியசாலையில் தமது பெற்றோருக்கெதிராகக் கோபித்து, நிராகரித்து, அழுது, கீழ்ப்படிய மறுப்பார்கள். அதனால், இதைவிட நீங்கள் வீட்டில் இருந்து விடலாம் என்பது இதன் கருத்தல்ல. ஒரு பிள்ளை தனது உணர்வை வெளிப்படுத்தி அதன் பிற்பாடு சமாதானமாக இருக்கும், இன்னுமொரு பிள்ளை எல்லாவற்றையும் தனக்குள்ளே வைத்துக் கொண்டு உணர்வை வெளிப்படுத்தாமல் இருக்கும்.



வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்பும் பிள்ளைகள் கணிசமானளவு சிரமமானவர்களாகவே இருப்பார்கள். தாயோ தந்தையோ எதையும் தடுக்க முடியாமல், தமது வாழ்க்கை ஒரே நாளில் மாறிப்போனதையிட்டும் தனது அனுபவங்களையிட்டும் பின்புதான் அவர்கள் சிந்திக்கத் தொடங்குவார்கள்.

சில பிள்ளைகள் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின், முதலாவது வாரத்தில் நித்திரை செய்ய முடியாது சிரமப்படுவார்கள். உங்கள் பிள்ளை தூக்கத்திலிருக்கும்போது விழித்துக்கொண்டால், அதற்குப் பயப்படுவதற்கு எதுவுமில்லை என்று பழக்கப்படுவதற்கு ஆறுதல் கூறுங்கள். அதற்கு நம்பிக்கை ஏற்பட்டதும், இந்தப் பிரச்சினைகள் அநேகமாகத் தானாகவே மறைந்து விடும். இப் பிரச்சினைகள் தொடர்ந்தும் இருந்து கொண்டிருந்தால், ஒரு துறைசார்நிபுணரை நாடுங்கள்.

## "யார் எனக்கு உதவுவார்?"

**பெற்றோர், உதவியையும் ஆதரவையும் இங்கே பெறலாம்.**

வைத்தியசாலையில் தங்கியிருத்தலென்பது, முழுக்குடும்பத்துக்குமே அதிலும் பெற்றோருக்கு தாங்கக்கூடிய சுமையின் எல்லைக்கே கொண்டு போய்விடக்கூடிய ஒரு சிரமமான அனுபவமாகும். உங்களது வினாக்களுக்குத் தொலைபேசி அல்லது எழுத்து மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய, (சிறுவர், இளைஞரின் உரிமைக்கான சுவிஸ் சங்கமான) "சிறுவரும் வைத்தியசாலையும்" *(KIND & SPITAL)* இருப்பதை நீங்கள் அறிந்திருப்பது நல்லது. நாம் உங்களுக்குப் பன்முகப்பட்ட தகவல்கள், புத்தகங்கள், விளையாட்டுப்பொருட்கள் மூலம் ஆதரவு வழங்குவோம். அதுமட்டுமல்லாமல், வைத்தியசாலை சம்பந்தமாகச் செய்ய வேண்டிய ஆயத்தங்கள் பற்றிய உறுதியான ஆலோசனைகளையும், வைத்தியசாலையில் தங்கியிருப்பதற்கான பிரயோசனமான குறிப்புகளையும் நாம் வழங்குவோம். உங்கள் பிள்ளை வைத்தியசாலையில் தங்கியிருக்கும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை அணுகி அவற்றைத் தீர்ப்பதற்கு, எமது விசாலமான, நீண்டகால அனுபவத்தினூடாக நாம் உங்களுக்கு உதவுவோம்.

**நோய்வாய்ப்பட்ட பிள்ளையின் உரிமைக்கு ஆதரவு வழங்குங்கள்!**



சிறுவரும் வைத்தியசாலையும் *(KIND & SPITAL)* எனப்படும் இச் சங்கமானது பெற்றோர், வைத்தியப்பராமரிப்பாளர்கள், சிறுவர்வைத்தியர்கள் அத்துடன் சிறுவருடன் இணைந்து பணியாற்றுபவர்களைக் கொண்டது.

ஐ.நா. சபையின் சிறுவருக்கான உரிமை பற்றிய உடன்படிக்கைக்கிணங்க, பிள்ளைகள் வைத்தியசாலையில் தங்கியிருக்கும்போதான 10 விடயங்கள் பற்றி 1988 இல் தீர்மானிக்கப்பட்ட விசாலமான ஐரோப்பிய சாசனத்தை நாமும் பின்பற்றுகின்றோம். 18 ஐரோப்பிய நாடுகளிலுள்ள அமைப்புக்களுடன் ஐரோப்பிய தலைமைச்சங்கத்தின் கீழ் *(EACH –European Association for Children in Hospital)* நாம் இந்தப் பெரிய இலக்கை நோக்கிப் பணியாற்றுகின்றோம்.

நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளுக்காகப் பேச அதிகாரம் மிக்க ஒரு அமைப்பு இல்லை. அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக, சிறுவரும் வைத்தியசாலையும் *(KIND & SPITAL)* எனப்படும் சுவிஸ் அமைப்புடன் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.


Diese Broschüre ist mit Unterstützung durch migesplus.ch entstanden. www.migesplus.ch - Gesundheitsinformationen für Migrantinnen und Migranten. Schweizerisches Rotes Kreuz, Departement Gesundheit und Integration.



**KIND & SPITAL**
**Postfach 416, CH-5600 Lenzburg 1**
**Tel. 062 888 01 77**
**E-Mail: info@kindundspital.ch**
**www.kindundspital.ch**

Postkonto: 80 - 67141 - 4

Bank: Aarg. Kantonalbank, CH-5001 Aarau
Kto. 16 130.655.36
IBAN: CH03 0076 1016 0130 6553 6



Reverdin Publicité Illustrationen: © B. Bietenholz 09/12


Tamilisch

# "நான் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறப் போகின்றேன்"



## சிறுவர், பெற்றோர், பாதுகாவலருக்கான சிறிய கையேடு.

**KIND & SPITAL**
சுகாதாரசேவையில் சிறுவர், இளைஞரின் உரிமைக்கான சுவிஸ் சங்கம்